UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS
RECEIVED
1980-4-24
PERIODICALS DIVISION

பக்கங்கள் 8

ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 | சித்திரை 12 | ஜ-ஆகிர் 8 | இதழ் 74
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 24-4-80

## லால்வாணி மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

புதுடில்லி, ஏப். 23 பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி மீது கத்தி வீசிய சம்பவம் தொடர்பாக பரோடாவைச் சேர்ந்த லால்வாணி (37 வயது) கைது செய்யப்பட்ட மனு சம்பந்தமான விசாரணையை இந்திய நீதிமன்றம் மே 4-ந் திகதி வரை ஒத்திவைத்தது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை கொலை செய்ய முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டு லால்வாணி மீது சுமத்தப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண விடிவெள்ளி

# அமரர் கனகரத்தினம்

# இறுதிச்சடங்கில் பிரதமர் பிரேமதாசா

(மட்டக்களப்பு)

**மறைந்த மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம் பாராளுமன்றத்தில் அவரது சகாக்களுக்கு உதாரண புருஷராகத் திகழ்ந்தார்.**

மேற்கண்டவாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா அமரர் கனகரத்தினத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கலுரையாற்றுகையில் கூறினார்.

அன்னாரின் சடலம் மட்டக்களப்பு நகரமண்டபத்திலிருந்து கல்லடிக்கு தகனம் செய்யப்படுவதற்காக எடுத்துச்செல்லப்படுவதற்கு முன் இரங்கலுரையாற்றிய திரு. பிரேமதாசா மேலும் தெரிவித்ததாவது:

அன்னாரின் நட்பு மனப்பான்மை அனைத்து மக்களையும் கவர்ந்தது. அன்னாரின் மீது ஜனாதிபதி வைத்துள்ள நம்பிக்கையின் பேரிலேயே அவரை மாவட்ட அமைச்சராக நியமித்தாரென்றார்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை தனது இரங்கலுரையில் அமரர் கனகரத்தினத்தின் இறுதிக்கிரியைகளில் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் கலந்து கொண்டதன் மூலம் தமிழ்மக்கள் மீது அவர்கள் வைத்துள்ள அபிமானத்தை எடுத்துக் காட்டுகிறதென்றார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் இரங்கலுரையாற்றுகையில் அமரர் கனகரத்தினம் கிழக்குமாகாண மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக தனது கொள்கையையே மாற்றிக் கொண்டார். சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்காக அவர் இரவு பகல் பாராது பாடுபட்டார் என்றார்.

பொத்துவில் முதலாவது எம். பி. ஜலால்டீன், அம்பாறை எம். பி. தயாரத்ன, மன்னார் மாவட்ட அமைச்சர் மஹ்ரூப், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனூப் மன்சூர் ஆகியோரும் இரங்கலுரையாற்றினர்.

## நாராயணசாமி மீதான வழக்கு வாபஸ்

(சென்னை)

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு மீதும் மற்றும் சிலர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவதென தமிழ்நாடு அரசு

(8-ம் பக்கம்பார்க்க)

## மயக்கமடைந்தவர் மரணம் கார்ச்சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

மயக்கமடைந்த நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவரின் மரணம் தொடர்பாக, சுன்னாகத்தைச் சேர்ந்த கார் ஒன்றை ஆனைக்கோட்டை பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் தில்லைநாதன் துரை கைப்பற்றியுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கார்ச் சாரதி சண்முகம் பாலசுப்பிரமணியம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாவடியில் வீதியோரத்தில் மயக்கமடைந்தநிலையில்கிடந்த ஒருவரை அவ்வழியால் வந்த லொறிச்சாரதி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். மயக்கமடைந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் கந்தசாமி என அடையாளம் காணப்பட்டது.

இவரைக் காணவில்லையென உறவினர், ஆனைக்கோட்டைப் பொலிஸில் புகார்செய்திருந்தனர். மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியி லிருப்பவர் தான் இவர் என கண்டுபிடிக்கப்பட்டது.

புத்தாண்டுதினத்தில் அனுமதிக்கப்பட்ட அவர் 20ம் தேதி ஆஸ்பத்திரியில் மரணமானார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

நேற்று சந்தேகத்தின்பேரில் கார்ச்சாரதி கைதுசெய்யப்பட்டு, ஆஜர்செய்யப்பட்டார் இவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, மரண விசாரணை அதிகாரி விசாரணையை ஒத்திவைத்தார்.

(பண். நி)

## ஜெர்மனி சென்று 'திரும்பியவர்': விரக்தியடைந்து மனைவி தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் ஈச்சமட்டையில் நிகழ்ந்தது.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் மரணமான மேரி ஸ்ரெல்லாவின் கணவரான மரியநாயகம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. மனைவியையும்பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்தில் விட்டு, ஜெர்மனிக்கு வேலை தேடிச் சென்றேன். வேலை கிடைக்காததால் திரும்பிவந்துவிட்டேன். அதனால் எனது மனைவி மனவிரக்தியுற்றிருந்தார். தற்கொலை செய்யும் நோக்கத்துடன் ஒருமுறைவீட்டுக் கிணற்றில் குதித்தார் அயலவர்களின் உதவியுடன் எனதுமனைவியைக் காப்பாற்றிவிட்டேன். ஆனாலும் அவர் மனவிரக்தியுடனேயே காணப்பட்டார்.

"சம்பவதினம் காலை பத்துமணியளவில் நான் மீன் வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன். வீட்டின் அறைக்குள் இருந்து எனது மனைவி முனகும் சத்தம் கேட்டது. அறையைத் திறந்து பார்த்தேன். அவரது வாயிலிருந்து நுரை வெளியே வந்துகொண்டிருந்தது. என்ன நடந்தது எனக்கேட்டேன். கிருமிநாசினி அருந்திவிட்டதாகக் கூறினார். அவரைக் காப்பாற்ற முயற்சியெடுத்தும் அவர்இறந்துவிட்டார்" என்றார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தாமோதரம்பிள்ளை சாட்சிகளை ஆஜர் ... அதிகாரி தீர்ப்பளித்தார். (கொ)

## உணவுப் பண்டங்களின் பட்டியல்கள் தொங்கவிடவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உணவுச் சாலைகளிலும். உணவுப்பண்டங்களின் விலையையும், அவற்றின் நிறையையும், குறிப்பிடப்பட்டபெயர்ப் பட்டியல்களையும் பொதுமக்களின்பாவனைக்குதுலாபாரமாக தொங்கவிடப் படவேண்டும். இவற்றை மீறும் உணவுச்சாலை முதலாளிமார்கள் மீது, விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் திடீர் சோதனைகளை நடாத்தி, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளனர்.

சகலஉணவுச் சாலைகளிலும் பின் வரும் பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

கோப்பை பால் தேனீர், பாலில்லாத தேனீர், இடியப்பம், பிட்டு, வனில், தோசை, வடை, ரொட்டி, அப்பம் ஆகியன இப்பட்டியலில் காட்டப்படல் வேண்டும்.

[8ம் பக்கம் பார்க்க]

இரு சமூகங்களுக்கிடையில்

## மோதல் - மூவர் காயம்

(வேலணை)

வேலணைப் பகுதியில் இரு சமூகங்களுக்கிடையிலே ஏற்பட்டுள்ள மோதல்களில் நேற்று வரை மூன்று பேர் காயமுற்றுள்ளனர்.

சில தினங்களாகவே நடைபெற்றுள்ள இம்மோதல்களில் ஏற்கனவே இருவர் காயமுற்று ஒருவர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலும் மற்றவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நேற்று மாலை மேலும் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்தார் இவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

## நாளை கைலாய வாகன உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று பத்தாம்நாள் மஞ்சத்திருவிழாவும் நாளை பதினோராம் நாள் கையிலாயவாகனமும் நடைபெறவுள்ளது

தினமும் மாலை ஸ்ரீலஸ்ரீ ... ரமாச்சாரிய ... பற்றி ... த்திவருகிறார். (...)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ரௌத்திரி வருடம் சித்திரை மாதம் 12-ம் நாள் (24-04-1980) இன்று வியாழக்கிழமை இரவு 8-15க்கும் 9-15க்குமிடையில் வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் தியாகராஜாவுக்கும் (போர்மன். இலங்கை புகையிரத திணைக்களம், கொழும்பு) | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி சற்குணதேவிக்கும் |

களபூமி காரைநகரில் மணமகளில்லத்தில் நடைபெறவுள்ள மணவிழாவில் குடும்பசமேதராய் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புகூர்ந்து வரவேற்கிறோம்.

இவ்வண்ணம்

| | |
|---|---|
| க. வைத்திலிங்கம், (இளைப்பாறிய ஆசிரியர், காரைநகர் | க. கு கந்தையாபிள்ளை, (பிரபல வர்த்தகர் யாழ்நகர். |
| திருமதி வைத்திலிங்கம், மணற்பிட்டி, காரைநகர். | திருமதி கந்தையாபிள்ளை களபூமி, காரைநகர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மில்லில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5545

### விற்பனைக்கு

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி நல்லூர் மாக்கட்டுக்கு அருகாமையில் புதிய வீடு 3½ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு தி. குமாரசாமி, 'தில்லைவாசா' நல்லூர் தபாற்கந்தோரடி, கல்வயங்காடு மார்கட்டுக்கு அருகாமையில், நல்லூர், யாழ்ப்பாணம். 5550

சி. கனகரத்தினம்
ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்
கனகரத்தினம் கேசவன்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசும்.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ—பிரிவுகள் 524, 532

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராமநாதன், 11/12, கப்பித்தாவத்தை, கொழும்பு—10. என்பரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சங்கரப்பிள்ளை கைம்பெண் இராசம்மா, 109, கச்சேரி நல்லூர் றோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன ) நியாயாதிக்கம் )இல.ரி/3295

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23 ஆந் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
பொ. பாக்கியநாதன்.
(ஒப்பம்)
பதிவாளர்

1980 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 5562

# "புங்குடுதீவு - நயினாதீவுக்கு பொது உ. அ. அதிபர் பிரிவு"

## யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

"புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இரண்டு பகுதிகளையும் உள்ளடக்கி, பொதுவான ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமைக்கப்படவேண்டும்" யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் நடைபெற்ற அரசாங்க அதிபர்களின் மாநாட்டிலேயே யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்ட கோரிக்கையைச் சமர்ப்பித்தார்.

இம்மாநாட்டில் முதல்நாள், உள்நாட்டமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகமும், இரண்டாம் நாள் விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவும சிறப்புரை ஆற்றினர்கள்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி விடுத்த கோரிக்கையில், இலங்கையின் வேறு சில மாவட்டங்களில் அமுல்படுத்தியுள்ள பெண்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், யாழ் மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (ம)

## யாழ். இராமகிருஷ்ண சேவாச்சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஸ்ரீ இராமக்கிருஷ்ண சேவாச்சிரமத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை கொக்குவிலுள்ள சேவாச்சிரம அலுவலகத்தல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

(...அ)

## நயினாதீவு கிராமசபை கேள்வி விளம்பரம்

நயினாதீவு வங்களாவடிப் பாலவேலைக்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன. ரூபா ஐம்பதினாயிரம் பெறுமதியான வேலைகளை எடுத்துச் செய்வதற்குப் பதிவு பெற்றவர்களும், பதிவு செய்யப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், கேள்விப்பத்திரங்களை ரூபா இருபத்திஐந்து கேள்விப் பணமாகவும் ரூபா மூன்று பத்திரப்பணமாகவும் செலுத்தியதின் பேரில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 6-5-80 பகல் 12 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம் கேள்விகள் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ 9-5-80 காலை 11 மணிக்குக் கிடைக்கக் கூடியதாக உ. ஆ. உ. ஆ. அவர்கட்கும், கிராமசபை விசேட ஆணையாளருக்கும் அனுப்புதல் வேண்டும். ஏனைய விபரங்கள் கந்தோர் நேரத்தில் கிராமசபையில் அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்)
க. பரமலிங்கம்.
விசேட ஆணையாளர்.
கிராமசபை, நயினாதீவு.

கிராமசபை அலுவலகம்,
நயினாதீவு,
22-4-1980. 5573

## மதுவுடன் கிருமிநாசினி கலந்து குடித்தாராம்

(யாழ்ப்பாணம்)

கள்ளுக்குள் கிருமிநாசினி கலந்து குடித்த ஒருவர், ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்

அரியாலை கிழக்கைச் சேர்ந்த முத்துச்சாமி கறுப்பையா (50 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணையை மேற்கொண்டார்.

கறுப்பையா கூலி வேலை செய்து வந்தவர் என்றும், தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டை பிடிப்பார் என்றும் சம்பவ தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டை பிடித்தார் என்றும் இரவு 10 மணியளவில் கள்ளுக்குள் கிருமிநாசினியை கலந்து குடித்தார் என்றும் இம்முயற்சியை தடுத்தபோதும் அவர் அதை குடித்துவிட்டார் என்றும் சிறிது நேரத்தில் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார் என்றும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கொ)

# வடமராட்சிப் பகுதி பஸ்சேவை

## மே முதலாம் திகதி முதல் சிறப்பாக நடைபெற ஏற்பாடு

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில், சிறப்பான பஸ் சேவையை நடத்தும் முகமாக வடபிராந்திய இ. போ. ச. தலைவர் திரு. டட்லிகுணசேகரா, வடமராட்சிப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை செய்துள்ளார்.

வடபிராந்திய தலைமைச் செயலகத்தில் அவர் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில், பருத்தித்துறை, உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர்களான திரு கே. துரைரத்தினம், த. இராசலிங்கம், பருத்தித்துறை சாலை அத்தியட்சகர் என். சிறிஸ்கந்தராசா கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை எம். பி இக்கூட்டத்தில், 751 இலக்க சேவையில் குறைந்தளவு பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகப் புகார் தெரிவித்திருந்தார். இ. போ. ச. அதிகாரிகள் இதனை புள்ளி விபரங்கள் மூலம் மறுத்துரைத்தனர்.

பருத்தித்துறை சாலையால் நடாத்தப்படும் அனைத்து கொடிகாமம் சேவைகளும், வதிரிச்சந்திக்கு ஊடாக நடாத்தவேணவும் அதனை அடுத்த மாதம் 1ம் திகதி ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட சில தீர்மானங்கள் வருவன.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி நோயாளிகளை பார்வையிடச் செல்லும் பிரயாணிகளின் நலன் கருதி காலை 11 மணிக்கு சமரபாகு ஊடாகவும் நெல்லியடி உடுப்பிட்டி ஊடாகவும் கடுகதிசேவைகளை நடத்துதல்

தாளையடிக்கு கடற்கரைத் தும்பளை ஊடாக இரண்டு சேவைகளை நடத்துதல்

தனியார் கல்விநிலைய மாணவர்களின் நலனுக்காக இரவு நேரங்களில் விசேட சேவைகளை ஆரம்பித்தல்.

பொலிகண்டி, திக்கம், நெல்லியடி ஊடாக அச்சுவேலி வரை குறுகிய தூர சேவையை நடத்துதல்.

## 28ம் திகதி பயிற்சி ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் மத்தியிலிருந்து "அற்றன்டன்ற்" பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 16 ஆண் ஊழியர்களும் 30 பெண் ஊழியர்களுக்குமான மூன்று மாதப் பயிற்சி வகுப்பு இம்மாதம் 28ம் திகதி யாழ். அரசினர் வைத்தியசாலையில் ஆரம்பமாகவுள்ளது. (அ)

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 12-ம் திகதி (24-4-80) வியாழக்கிழமை

மேடம்: பிதாவழியினிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும், புண்ணிய காரியங்களில் மனம் நாடும், நீண்ட நாள் மனக்குறைவு இன்று நிவர்த்தியாகும்.

இடபம்: இதயத்தின் ஏக்கம் இன்று கனியும், தேடிய பொருள் காலடியில் சரண் அடையும், பரோபகாரச் சிந்தை மேலிடும், நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள், செல்வாக்குப் பெருகும்.

மிதுனம்: வசதிகள் பெருகும், வரவிலும் திருப்தி ஏற்படும், செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விஷயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத் தரும்.

கடகம்: பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதிய முதலீடுகளை தவிர்க்கவும், தொழில் புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையை தவிர்த்துக்கொள்வது நன்று.

சிங்கம்: ஆணவப் போக்கினால் நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள், மற்றவர்களின் விஷயங்களுக்குவழித் தலையிடு ஆத்திரத்தை மூட்டலாம், பணிவுடன் நடப்பின் வெற்றி உமக்கே.

கன்னி: எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும், சிலருக்குத் திடீர் திரவிய லாபமும் கிடைக்கும், கலகலப்பான தினம்.

துலாம்: எதிலும் அவசரக்கோலம் தென்படும், துரிதகதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடுவீர்கள், தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருச்சிகம்: லாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமான விருத்தியுண்டு தாய்வழிப் பொருள் வரவும் உண்டு.

தனுசு: மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் பிறக்கும், குடும்பப் பிரச்னைகளில் சமூகமான நிலை தென்படும், இன்று பொன்னுள்.

மகரம்: தூரப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவுக்கு இடமுண்டு, சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

கும்பம்: சாஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

(7-ம் பக்கம் பார்க்க)

## மருந்துத் தட்டுப்பாடு: வெளிநாடு செல்வோர் அவதி

(அரியாலை)

மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புப் பெற்று செல்பவர்களின் பயணங்கள் தாமதமாகியுள்ளன.

கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்ட பொழுதிலும் கடந்த இரண்டு வாரங்களாக இம்மருந்துக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இவ்வூசி மருந்து ஏற்றப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்ற பலர் இந்த மருந்துத் தட்டுப்பாடு காரணமாகத் தமது பயணங்களைக் கடைசி நேரத்தில் ஒத்தி வைத்துள்ளனர். (அ)

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/1309 ஆம் இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம் கந்தர்மடம் 10, இந்து மகளிர் ஒழுங்கை பொ. நாகலிங்கம் நடராசா கைம்பெண் திருஞானசம்பந்தரிக்கு (தானாகவும், தனது காலஞ்சென்ற கணவன் சொத்தின் நிர்வாகதத்துவ காரியாகவும்) விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத் தொகை 17,417 ரூபா 94 சதமும் வழக்குச் செலவு ரூபா 755-07 சதமும் விற்பனவுச் செலார்களும். இதில் 18-11-77, 18-8-78, 13-6-79 ஆகிய திகதிகளில் முறையே செலுத்திய ரூபா 1,000/-, ரூபா 2,000/- ரூபா 1,500/- கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதிகள் கண்டிக்குழி கச்சேரி நல்லூர் வீதி 6 பாரதி ஒழுங்கை, தம்பையா நாகராசா, பெண் அன்னலெட்சுமி ஆகியவர்களிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி முக்கிய சம்பந்தப்பட்ட [ வடமாகாணம் யாழ்ப்பாணடிஸ்திரிக்கம் பகுதியம் கண்டிக்குழிக் கோவிற்பற்று, இனியாதெரு இனற "நெற்றன் தோட்டம்" நில, பர, இ கல்வீடும், கிணறும் பயிர்களும். இதன் எல்லைக்காரர்கள். கிழக்கு கதிரவேலு பரமநாதனின் உரித்தாளர்களும் வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லாச்சியும், வடக்கு ஒழுங்கை, மேற்கு பாஞ்சோதி பெண் கமலாம்பிகை தெற்கு கணபதியார் சின்னத்தம்பியும் மறுபேரும், இது அடங்கலும் பதிவு D 282/245 [ அதனைம் 1980 ஆம் மே மீ 16 உ (16-05-80) வெள்ளிக்கிழமை காலை பத்துமணி தொடக்கம் இவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வி. செ. குட்டிப்பிள்ளை
[illegible]
5568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னடக்க முடைய மனிதன் பழிவாங்கு மியல்பும் எல்லாவகை வஞ்சகமும் இல்லாதவன் அவன் நன்கு நடந்து கொள்பவன் அவன் மெச்சலாலும் கடிதலாலும் பாதிக்கப் படுவதில்லை. அவன் உளத் திட்பம் இயற் பண்பாகப் பெற்றிருக்கிறான். அவன் தன் மன வெழுச்சிகளின் பூரண அதிகாரி

—சுவாமி சிவானந்தர்

# தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணியின் வரலாறும், சாதனைகளும்

(தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியின் 3-வது பேராளர் மாநாடு இன்று வியாழக்கிழமை காலை கொழும்பில நடைபெறுகிறது)

1956ல் "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டுவந்த பின்னர் இந்நாட்டிலுள்ள தொழிலாளர்களிடையே இனரீதியான மொழிரீதியான பிரிவினை ஏற்பட்டது "சிங்களம் மட்டும்" சட்டம் தமிழ் ஊழியர்களுக்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் ஊழியர்கள் அவர்களது உரிமையைப் பாதுகாக்க மொழிவழித் தொழிற் சங்கங்களைத் தோற்றுவிக்க முற்பட்டனர் பல்வேறு துறைகளிலும் பணியாற்றிய தமிழ் ஊழியர்கள் இடதுசாரித் தொழிற்சங்கங்களிலிருந்து பிரிந்து தனித் தொழிற்சங்கங்கள் அமைத்தனர். அரசாங்கத்துறையில் பணியாற்றி வந்த எழுதுவினைஞர்கள் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்திலிருந்து பிரிந்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கினர். இதுவே மொழிவழித் தொழிற்சங்கங்களில் முதுபெரும் சங்கமாக இன்று திகழ்கிறது. இதை உருவாக்கி வளர்க்க அத்திவாரமிட்ட திருவாளர்கள்: சிவானந்த சுந்தரம், கோடீஸ்வரன், இராமநாதன், பாலசுப்பிரமணியம், நமசிவாயம், தங்கவேல் போன்றவர்களின் சேவைகளைத் தமிழ் ஊழியர்கள் என்றும் மறக்க முடியாது. வவுனியாவில் தலைமை அலுவலகத்தை அமைப்பதற்காக காணியைப்பெறுவதில் தமிழ்த் தொ. ச. கூட்டணியின் முன்னாள் தலைவர் திரு. ச. நமசிவாயம் ஆற்றிய பங்கு மகத்தானது

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம். அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் போன்ற இன, மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோன்றின. இன்று 30க்கு மேற்பட்ட தமிழ்த் தொழிற்சங்கங்கள் இலங்கையில் இயங்கி வருகின்றன.

மொழிவழித் தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓர் சம்மேளனமாக இயங்க வைக்க வேண்டுமென திரு கோடீஸ்வரன் காலத்திலிருந்து பல மேற்கொண்ட முயற்சியின் காரணமாக 1973ல் தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அ. எ. சங்கம் உட்பட 9 மொழிவழித் தொழிற்சங்கங்கள் உறுப்புரிமை வகித்தன. 1976ல் தந்தை செல்வா அவர்களின் வேண்டுகோளின் பேரில் த. தொ. ச கூட்டணி புனரமைப்புச் செய்யப்பட்டது இன்று 22 மொழி வழித் தொழிற்சங்கங்கள் த. தொ. ச. கூட்டணியின் உறுப்புரிமை பெற்றுள்ளன. சுமார் 33,000க்கு மேற்பட்ட தமிழ் ஊழியர்களை உள்ளடக்கிய

இலும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதிலும் த. தொ. ச. கூட்டணி அவ்வவ் மொழிவழித் தொழிற்சங்கங்களுடன் இணைந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் நிலைமைகளை சன்சோனி விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளித்ததோடு, அவர்களுக்கு தக்க நிவாரணம் வழங்குமாறு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. லெஸ்லி பாட்லட் தலைமையிலான சட்டத்தரணி குழுமூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

தமிழ்த் தொழிற்சங்க...

**— ஐ. தி. சம்பந்தன் —**
(செயலாளர் நாயகம் - த. தொ. ச. கூட்டணி)

தமிழ்த் தொழிலாளரின் பேரியக்கமாக தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி இன்று திகழ்கிறது. மேலும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், உட்பட இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கம், ஐக்கிய உள்ளூராட்சி சேவை மேற்பார்வையாளர் சங்கம் ஆகியன அங்கத்துவம் கோரி விண்ணப்பித்துள்ளன

இதன் 3வது பேராளர் மாநாடு இன்று வியாழக் கிழமை காலை கொழும்பு சோனக இஸ்லாமிய கலாச்சார மண்டபத்தில் தலைவர் சே. மா. செல்லத்தம்பு தலைமையில் நடைபெறவுள்ளது. இதுகால வரையும் தமிழ்த் தொழிலாளர்ளின் நலன் கருதி த. தொ. ச. கூட்டணி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்.

சிதறுண்டிருந்த தமிழ்த் தொழிற்சங்கங்களையும் தமிழ்த் தொழிலாளர்களையும் ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டுள்ளது.

சிங்களத் தேர்ச்சியின்மையால் கவலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலையை கொடுப்பதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேடிக் கொடுப்பதிலும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளது.

இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு விரைந்து பணியாற்றியதோடு குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊழியர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதில் இலங்கை மன்றக் கல்லூரியில் தொழிற்சங்கப் பயிற்சி பெறுவதற்கு வழிசெய்து கொடுக்கப்பட்டது

சர்வதேச தொழிற் சங்கங்களுடன் தொடர்பை வலுப்படுத்தியதோடு முக்கிய சர்வதேச தொழிற்சங்கத்துடன் இணைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு சமூக பொருளாதாரத் திட்டம் ஒன்று அமுல் நடத்தப்பட விருக்கிறது

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி மேற்கொண்ட நடவடிக்கையால் இந்நாட்டிலுள்ள மாற்றுத் தொழிற்சங்கங்கள் பல தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுள்ளதோடு அத்தொழிற்சங்கங்கள் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கம் கொண்டுவந்த பயங்கரவாதச் சட்டத்தை வாபஸ்வாங்குமாறு இலங்கையிலுள்ள முக்கிய 17 தொழிற் சங்கங்களுடன் தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற தொழிற் சங்கங்களின் தேசிய மாநாட்டில் தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியின் பிரதிநிதிகள் பங்குபற்றியதோடு, தமிழ் ஊழியர்களின் பிரச்சனைகளை சிங்களத் தொழிலாளர்களின் மத்தியில் ஆணித்தரமாக எடுத்துக்கூறி அவர்களிடையே எழுச்சியை ஏற்படுத்தியது. (கொ)

## மக்கள் கருத்து

### திருநெல்வேலி மாதிரிச் சந்தை

திருநெல்வேலி மாதிரிச் சந்தை நல்லூர்த் தொகுதியில் நல்லூர் கிராமாட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பாரிய சந்தையாகும். அதிகாலையிலேயே கூடும் இச்சந்தை மூலம் உடன் தோட்டக்காய் கறிகளை யாழ் பட்டினப்பகுதி மக்களும் வியாபாரிகளும் பெறக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இச்சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பலர் வியாபாரம் செய்யுமிடங்களைத் தங்கள் சொந்தச் சாக்குகளால் கட்டி, நாளாந்தம் நல்லூர்க் கிராமாட்சி மன்றத்துக்கு குத்தகையும் செலுத்திக் கொண்டு, வெயிலிலும், மழையிலும் இருந்து கஷ்டமுறுவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது ஒரு மாதத்திற்கு முன்பும் இச்சந்தை வியாபாரிகளனைவரும் கையொப்பமிட்டு "தகிக்கும் வெயிலில் ஏழை வியாபாரிகள், ஆனால் துவிச்சக்கரவண்டிகளுக்கோ பாதுகாப்புக் கொட்டகையா?" என்ற தலைப்புடன் ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டு தமது கஷ்டத்தை உரியவர்களுக்கு உணர்த்தியிருந்தார்கள். ஆனால் இதுவரை காய்கறி கழுவும் தண்ணீர்ப் பைப்போ, மலசலகூடமோ, கொட்டகைகளோ அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அத்துடன் இச்சந்தையின் கீழ்மாடியில் உள்ள ஏழு கடைகளும் குத்தகைக்காக மாதாந்த வாடகை ரூபா நூற்றி ஐம்பதுக்கு கொடுப்பதற்குக் கேள்விமனுக் கோரப்பட்டுள்ளது. இதில் யாதொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது எதனையுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்கு உரியது என்று தார்மீக ஜனநாயக சோஷலிச ஜயவர்த்தன ஆட்சியின்கீழ் கடமையாற்றும் ஊழியர்களால் பத்திரிகையில் பிரசுரம் செய்யப் பட்டுள்ளது இதனால் பாதிப்புறுபவர்களைக் காக்கும் கடமை நல்லூர் கிராமாட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் வரியிறுப்பாளர் சங்கத்தினுடையது. அதனை அவர்கள் மக்கள் நலன் நீதி நியாயம் வேண்டி நிலைநிறுத்துவார்களா?

கே.எஸ்.இராஜேஸ்வரன்
ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# புதுமைகள் அளிக்கும் புனித யூதாததேயு இன்று உற்சவம் ஆரம்பம்

— செ. யோசேப் பாலா —



[அரியாலை புனித யூதா ததேயு ஆலயத் திருவிழா இன்று ஆரம்பமாகி 4 நாட்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு நடைபெறும் ஆயரின் திருநாள் திருப்பலியும் திருச்சுருப ஆசீர்வாதத்துடனும் திருவிழா முடிவடைகிறது.]

யாழ்ப்பாணம் அரியாலை புனித யூதா ததேயு ஆலயத் திருவிழா இன்று பங்குத்தந்தை அருட்திரு வாஸ் அடிகளினால் திருவிழாத் திருநாள் தொடக்க ஆராதனைகளைத் தொடர்ந்து தினசரி ஆராதனைகளும் 26ந் திகதி நற்கருணைப் பணியும் ஆசீர்வாதமும் இடம்பெறும். 27ந் திகதி காலை திருவிழாப் பலிப்பூசை அதிவண. யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் ஒப்புக்கொடுக்கப்பட்டு, திருச்சுரூபப் பவனியும் நடைபெறவுள்ளது.

இப்புனிதரின் திருத்தலம் முதலில் மட்டுநகர்ப் பகுதியில் உள்ள தேத்தாத்தீவிலும் பின்னர் அரியாலைப் பதியிலும் ஆரம்பிக்கப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வேண்டுதலுக்கு அருள்பாலித்துப் பலருக்குப் பல புதுமைகள் நிகழ்ந்ததன் மூலம் யாழ்குடாநாட்டிலும் மற்றும் பல பாகங்களிலும் பக்தர்களின் தொகை பெருகிப்பெருகிவருவதைக் காணலாம். இவ்வாலயத்தில் மாதாந்தம் முதல் வெள்ளிக்கிழமைகளிலும் சித்திரைக் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளிலும் பல பாகங்களிலுமிருந்து திருப்பயணிகள் ஆலய வழிபாட்டிற்காக வருகைதந்து அருளைப் பெற்றுச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

புனிதரின் சிந்தனைகளையும், பெருமைகளையும், பற்றிக் கூறுவதாகில் திருச்சபையால் இப்புனிதரைக் "கைவிடப்பட்டவரின் பாதுகாவலர்" எனவும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் யேசுவின் இராப்போசனத்தில் பங்குகொண்டவர்களுள் ஒருவராகவும், அவரது நெருங்கிய உறவினராகவும் உள்ளார். புனித யூதா ததேயு என்னும் பெயருக்கு, சீரிய பாஷையில் கபடமற்றவர், சாந்தமும் அன்பும் நிறைந்தவர் என்பது பொருளாகும். இப்புனிதரின் தொண்டு யூதேயா, சமாரியா, இதுமியா, மொசபத்தேமியா போன்ற தேசங்களில் காட்டுமிராண்டிகளாகச் சீவித்த அத்தேச மக்களைச் சீர்திருத்தமுள்ளவர்களாகச் சீவிக்கக் கற்பித்தார். இவரது பணியைப் பாரசீயா தேசத்து பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு இறை பணியைப் போதித்துவருகையில் அஞ்ஞானிகளாலும், மூடசந்நியாசிகளாலும் பல தொல்லைகளுக்கு ஆளாகி, ஈற்றில் அவரது இறைபக்தி வளர்வதால் ஆத்திரம் கொண்டவர்கள், அவரைப் பாரிய தண்டம் கொண்டு தாக்கியும், கோடரியால் அவரது சிரசைத் துண்டித்தும், அவரது இறைபக்தி உணர்வுகள் தளராததால், ஈற்றில் புனிதராகி இறைவனின் துணையுடன் பல புதுமைகள் ... நிறைந்த ... வருகிறார். (ஈ)

## மிளகாய்ச் செய்கை பற்றிய கருத்தரங்கு

(வேலணை)

வேலணைப் பகுதி மிளகாய்ச் செய்கையாளர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 28ம் திகதி வேலணை கிழக்கு கலைமகள் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை விவசாயப்போதனாசிரியர் திரு. அ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் மிளகாய்ச் செடியில் ஏற்பட்டுள்ள இலைச்சுருள் நோய், தாய் சுருளல் நோய் மிளகாய்ச் செடியின் குருத்து வெள்ளையாகி வருதல்போன்ற நோய்களை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பது குறித்து முக்கியமாக விவசாயிகளுக்கு விளக்கிக்கூறப்படும்.

கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை விவசாய விசாலிப்பு சேவையாளர் திரு. மு. கந்தட்புவும், திரு. இ. சற்குருநாதனும் செய்துள்ளனர்.

### கடத்தல் முயற்சி குறைந்துள்ளது

(மன்னார்)

கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளில் மன்னார் உதவி சுங்க தடுப்பதிகாரி ஜனாப் அகமது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பயனாகவும் மன்னார் கரையோரப்பகுதியில் நடைபெறும் ரோந்து நடவடிக்கைகளின் பயனாகவும் மன்னாரில் கள்ளக் கடத்தல் மிகவும் குறைந்துள்ளது

சுங்க பகுதியினர் ... கள்ளக் கடத்தல் ... பேர்வழிகள் மீது தீவிரமாக கண்காணிப்பு ... இன்று ...

### பாலஸ்தாபன அபிஷேகம்

(மன்னார்)

மன்னார்—நானாட்டான் முத்துமாரி அம்மன் கோவிலிலில் இம் மாதம் 27ம் திகதி காலை பாலஸ்தாபன அபிஷேகம் நடைபெறும்.

### கூட்டுறவுச்சபை கூட்டம்

(மன்னார்)

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்தக் கூட்டம் மே மாதம் 24ம் திகதி கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக்கு திருப்பப்படும் உணவுக் கப்பல்கள்

## துறைமுகத் தொழிலாளருக்கு அதிகலாபம் கிடைத்துள்ளது

(மாவிட்டபுரம்)

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டு வரும் இடநெருக்கடி காரணமாகவும் போதியளவு உணவுப்பொருட்கள் கையிருப்பில் இருக்கவேண்டும் என்று அரசாங்கம் வகுத்த புதிய திட்டத்தினாலும் அதிக கப்பல்களில் உணவுப்பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளதனுடிமகள் இம்முறை வடபகுதித் துறைமுகத் தொழிலாளருக்கு அதிக லாபம் கிட்டியுள்ளது.

அதே நேரத்தில் வடபகுதிக்கு கப்பல்களைத் திருப்புவதினால் அரசாங்கமும் அதிக அந்நிய செலாவணியை லாபமாகப்பெற்று வருகிறது இருபகுதியினரும் லாபம் அடையும் இத்திட்டத்தினால் அரசாங்கம் அதிக கப்பல்களை வடபகுதிக்கு அனுப்புவதில் இப்பொழுது ஆர்வம் காட்டி வருகிறது.

கடந்தவாரம் எம். வி. லின்லின் என்னும் சீனக்கப்பல் 9000 தொன் பர்மா அரிசியுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்திருந்தது. இக்கப்பலில் உள்ள அரிசியை 12 நாட்களில் பறிக்க இலங்கை அரசாங்கம் மேற்படி கப்பல் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இறக்குமதி வேலைகளைச் செய்த காங்கேசன்துறை கே. ஜெயபாலசிங்கம் கம்பனியார், ஒப்பந்தகாலத்திலும் பார்க்க மூன்று நாட்கள் ஆறுமணித்தியாலங்கள் முன்னதாக இறக்குமதி வேலைகளை முடித்து ஒருலட்சம் ரூபாவை அந்நிய செலாவணியாக இலங்கை அரசாங்கத்திற்கு சேமித்துக் கொடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து எம். வி. சற் என்னும் கிரேக்க கப்பல் 10,395 தொன் பிரிட்டிஷ் மாவுடன் காங்கேசன் துறைமுகத்திற்கு வந்துள்ளது. இதன் இறக்குமதி வேலைகளையும் கே. ஜெயபாலசிங்கம் அன் கம்பனியாரே பொறுப்பு ஏற்றுள்ளனர். இறக்குமதி வேலைகள் துரிதமாக நடைபெற்று முடியும் தறுவாயில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து யூகோஸ்லேவியா கப்பல் ஒன்றையும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு செல்லும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக நாலுகப்பல்கள் காங்கேசன் துறைக்கு திசைதிருப்பப்பட்டதன் காரணமாக அரசாங்க உணவுப் பண்டசாலைகளில் இடநெருக்கடி தலைதூக்கியுள்ளது. இதன் எதிரொலியாக அரசாங்கம் வவுனியா வரையுள்ள நெல்சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் பண்டசாலைகளையும் உணவுத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

---

## "குற்றங்களை ஒழித்து

# கிராமத்தின் பெருமையை உயர்த்த முன்வருக"

## — யாழ். பொலிஸ் அதிபர்

(மாவிட்டபுரம்)

"இன்று பொலிசாரும் பொதுமக்களும் ஒருவரை ஒருவர் புரிந்து நடக்க முன்வந்துள்ளது குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு நல்லதோர் அறிகுறியாகும். இந்த நல்லெண்ணம் தொடர்ந்தும் நீடித்து குற்றவாளிகள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்."

இவ்வாறு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவின் நோக்கமாக புத்தாண்டையொட்டி அச்சுவேலியில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய யாழ். பொலிஸ் அதிபர் திரு. இங்ஸ்லி விக்கிரமசூரியா கூறினார்.

காங்கேசன்துறைப் பொலிசாரும் அச்சுவேலிப் பகுதிப் பொதுமக்களும் இணைந்து நடத்திய இவ்விழாவில் பொலிஸ் அதிபர் மேலும் பேசும்போது குறிப்பிட்டதாவது: "நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்த கிராமங்களாகச் சில கிராமங்கள் இதுவரை காலமும் கருதப்பட்டன. அதில் அச்சுவேலியும் ஒன்றாகும். ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது. பொலிசார் பொதுமக்களுடன் நெருங்கிப்பழக நேரிட்டதால் இக்கிராமத்தில் இன்று குற்றச் செயல்கள் குறைந்துள்ளன. குற்றவாளி ஒருவரைச் சமுதாயம் எப்படி விலக்கி வைக்கிறதோ அதுபோல்தான் குற்றவாளிகள் நிறைந்த கிராமங்களையும் ஏனையவர்கள் விலக்கி வைக்கிறார்கள். ஆகவே கிராமத்தின் மதிப்பை குறைக்கும் குற்றங்களை ஒழிக்க மக்கள் உதவுவதன்மூலம் கிராமத்தின் பெருமையை உயர்த்திக் கொள்ளலாம்."

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. லூரஷன் விஜயக்கோன், காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. மேவின் பெரிஞ்ஞன்டோ, குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி திரு. ஆர். ஜி. பீரிஸ் ஆகியோரும் பேசினர். மாவி. தெனி)

---

## "திருவிழாக்களின் உட்கிடக்கை மனித வாழ்வுத் தத்துவங்கள்"

### நெடுந்தீவில் ஈழத்துச் சிவானந்தன்

(நெடுந்தீவு)

"கோவில்களிலே வருஷந்தோறும் திருக்கல்யாணத் திருவிழா எதற்காக நடைபெறுகிறது? சென்ற ஆண்டு நடந்த கல்யாணத்தில் இருந்த அதே பெண்ணைத்தானே இந்த ஆண்டும் மணமகளாக்கிக் கட்டுகிறான். இவையெல்லாம் எதற்காக என்று சைவர்களாகிய நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? திருவிழாக்களின் உட்கிடக்கை மனித வாழ்க்கையோடு இயைந்த தத்துவங்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்"

மேற்கண்டவாறு நெடுந்தீவு நெடுவினி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார்.

இலங்கை மெய்கண்டார் ஆதீனம் சிவத்திரு நம்பிரான் சுவாமிகள் தலைமைதாங்கிய நிகழ்ச்சியில் திரு. சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது: "மனிதர்கள் வாழ்க்கையில் கல்யாணம் செய்து குழந்தைகளோடும் சமுதாயத்தோடும் இன்ப அன்புடன் வாழவேண்டும் என்பதைக் குறிக்கவே வருடாவருடம் கடவுள் திருக்கோவில்களிலே கலியாணம் நடக்கிறது.

"மங்கை பங்கனாக, மாதொருபாகனாக, குவளைக்கண்ணிக்கூறனாக, பெண் சுமந்த பாகத்தனாக, அர்த்தநாரீஸ்வரனாக ஆண்டவன் காட்சிதந்து மனிதகுலத்தை இல்லற தர்மங்களை குறைவற்று செய்யுங்கள் என் அறிவுறுத்துகின்றான். ஒரு கிராமத்தில் நடைபெறுகின்ற அப்பகுதி மக்கள் போட்டி பொறாமையின்றி வாழ்க்கைத்தேரை ஒருமையுணர்வுடன் ஒற்றுமையாக இழுத்து வாழவேண்டுமென்பதுவே தாயான ... பெருவிருப்பமாகும். கைலாசத்து உச்சியுள்ள கடவுள் நிலத்தன் மேல்வந்த அருளி நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழவும் மகிழவும் அருள் பொழிகின்றான்.

"பால்தினைத் தூட்டும் தாயான பரம்பொருள் விக்கினேஸ்வரனாகவும், சுப்பிரமணியனாகவும், வீரபத்திரனாகவும் வைரவனாகவும் வெவ்வேறு கோலங்கொண்டு வேண்டப்படுவனை அறிந்து வேண்டமுழுவதையும் தந்து நம்மை அருளாட்சி செய்கின்றான். ஆண்டவனின் அருள் வெள்ளத்தில் யாரும் மூழ்கி மகிழலாம். ஏற்ற இறக்கங்கள், வீக்க தாக்கங்கள் இறைவன் சந்நிதானத்தில் இருப்பதில்லை"

பண்டிதர் க. பசுபதியின் வரவேற்புரையும், திரு. இராசின்னத்தம்பியின் ...யும் நிகழ்த்தினர்.

---

## வை. எம். சி. ஏ தேசிய மகாநாடு

(அரியாலை)

வை. எம் சி. ஏ. யின் வருடாந்த மகாநாடு எதிர்வரும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம் கண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டில் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள 23 வை. எம் சி ஏ கிளைகளிலிருந்து சுமார் 150 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

வை.எம்.சி.ஏ.தே.கவுன்சில் தலைவர் திரு. வி எல் வீரசிங்க தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டில் பொதுச் செயலாளர் திரு. வொய்ட் பெரேரா அறிக்கைகளைச் சமர்ப்பிப்பார்.

ஞாயிறு இரவு பரி யோவான் கல்லூரி பீற்றோ ஞாபகமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இரவு விருந்துடன் தேசிய மகாநாடு முடிவடையும்.

இம்மகாநாட்டிற்கான ஏற்பாடுகளை யாழ். வை. எம். சி ஏ தலைவர் திரு. எஸ். பரமானந்தமும், சட்டத்தரணி ஜி ம் மி இராஜரத்தினமும், செய்து வருகிறார்கள். (அ.

---

## வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

---

# ஐக்கியமேதின ஊர்வலத்தில் அணி திரள்வீர்!"

## கம்யூ. பிரமுகர் இக்பால் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"பங்கீட்டரிசி, மா, சீனி, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசிய பொருட்களின் மானியத்தை வெட்டி, மக்களைப் பட்டினிக் கஷ்டநிலைக்குத் தள்ளிவிட்டதுமல்லாமல்; வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து உள்ளூர் விவசாயிகளின் வயிற்றில் அடித்ததுடன், பெருவாரியாக ஆடம்பரப் பொருட்களை இறக்குமதிசெய்து, நம் நாட்டு மூலதனத்தை வெளிநாட்டு முதலாளிகளின் கையில் ஒப்படைத்த இன்றைய யூ. என். பி அரசாங்கம்; கொஞ்சமேனும் தேசப்பற்று அற்றதென்பதையும், தொழிலாளி, விவசாயி, சாதாரண உழைப்பாளி மக்களினதும் பிரதான எதிரியென்பதையும் தனது மூன்று வருட ஆட்சிக்காலத்தில் நிரூபித்துள்ளது."

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி (சண் தலைமை), இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றின் வடபிரதேசக் கமிட்டி சார்பில் ஜனாப் எல் ஏ சி இக்பால், மே தினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1977ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலவரத்துக்கும், அதையொட்டி வடபகுதியில் நடைபெற்ற அரசு யந்திரத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் இன்றைய அரசாங்கம் பொறுப்பாக இருந்துள்ளது. அப்பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் தமிழ் வாலிபர்களை அழித்து அடக்கி, தமிழ்மக்களின் சுயகௌரவத்திற்குச் சவால்விட்டுள்ளது. தர்மிஷ்டம் என்ற போர்வையில் பயங்கரமான, சர்வாதிகாரம் நடத்தும் அரசுக்கு எதிராகத் தமிழ்-சிங்கள-முஸ்லிம் தொழிலாளி-விவசாயிகள் ஏனைய சாதாரணப் பொது மக்கள் ஐக்கியப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சித் தினமான மேதினத்தில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க அணி திரள்வது அவசியமாகும்.

"இந்த அவசியத்தின் காரணமாகவே கொழும்பில் 3 தொழிற்சங்கங்களுடன் இணைந்து இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியும், அதன் கீழ் இயங்கும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனமும் இலங்கை வாலிபர் சங்க சம்மேளனமும் மேதின ஊர்வலம், பொதுக் கூட்டத்தை நடத்துகிறது. அதேபோல் வடபகுதியில் 8 தொழிற்சங்கங்களுடன் இணைந்து, நல்லூர் கல்யாண மண்டபத்திலிருந்து தனது மேதின ஊர்வலத்தை ஆரம்பித்து, யாழ் திறந்தவெளியரங்கில் கூட்டத்தை நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளது. எனவே வடபகுதியில் உள்ள எமது கட்சி, தொழிற்சங்க, வாலிபர் இயக்க அங்கத்தவர்கள், ஆதரதாளர்கள், அன்பர்கள், பொதுமக்கள் அனைவரையும் தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபையால் நடாத்தப்படும் ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவற்றில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று ஜனாப் இக்பால் மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (கோ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. விவசாய இளைஞர்கள் குழு யாழ். விஜயம்

## வடபகுதி விவசாய அபிவிருத்தியை நேரில் பார்வையிடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில், விவசாய அபிவிருத்திகளை நேரில் பார்வையிட்டு அந்த முறைகளை, கிழக்குப்பகுதியில் செயல்படுத்துவதற்காக, மட்டக்களப்பிலிருந்து விவசாய இளைஞர் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

திரு. மா. இராஜகோபால் தலைமையிலான இக்குழுவில் பதினொரு பேர் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் கல்லடி, உப்போடை இராமகிருஷ்ண மிஷன் சேவாச்சிரம நிலையத்தைச் சேர்ந்தவர்கள்.

பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இக்குழுவினரை, மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா ஜே. பி அண்ணை தொழிலக அதிபர் திரு எஸ். நடராசா ஆகியோர், வடபகுதியில் பல விவசாய, கைத்தொழில்பகுதிகளுக்கும், சமூகசேவை நிலையங்களுக்கும் அழைத்துச் சென்றனர்.

இக்குழுவினர் நேற்றுக் காலை 'ஈழநாடு' காரியாலயத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டனர். இக்குழுவினர் இம்மாதம் 26ம் தேதி சனிக்கிழமை மட்டக்களப்பு திரும்புகிறார்கள்.

### சேவாச்சிரமத்தில் 125 மாணவர்கள்

இக்குழுவினர் 'ஈழநாடு' அலுவலகத்திற்கு விஜயம் செய்தபோது இக்குழுவின் சேவாச்சிரம விவசாய பீடத் தலைவர் திரு. சி. சந்திரகுமார் எமது நிருபருக்களித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

"ஈழத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த 125 மாணவர்கள் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் சேவாச்சிரமத்தில இருக்கின்றோம். எம் மத்தியில் சாதி, மத பேதம் எதுவும் இல்லை. ஆச்சிரமத்திற்குச் சொந்தமான 28 ஏக்கர் நிலத்தில் இரு போகம் நெல் விளைவிக்கின்றோம். அதனுடன் காய் கறித்தோட்டமும் செய்கின்றோம். 28 ஏக்கருக்கும் நீர்ப்பாய்ச்சுவதற்கென ஒரு தனிக்குளம் உள்ளது. இதன் காரணமாக எமக்குத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. எமது நிலத்தில் விளையும் நெல், மற்றும் காய்கறிவகைகளும் எமது தேவைக்குக் காணக்கூடியதாக உள்ளது.

"மட்டக்களப்பில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுவதில்லை. அப்படியிருந்தும் பரீட்சார்த்தமாக உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொண்டு, நல்ல பலனையும் பெற்றோம்.

"யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் ஆகியன கூடுதலாகப் பயிரிடப்படுவதை அறிந்து அதனைப் பார்வையிடுவதற்காகவும், அந்த முறையை கற்று எமது பகுதியிலும் அந்த முறை அறிமுகப்படுத்தவும் மற்றும் இங்குள்ள கைத்தொழில் நிலையங்களையும், சமூகசேவை இல்லங்களையும் பார்வையிட்டுச் செல்வதற்காகவும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளோம்'' என்றும் தெரிவித்தார். (கொ)

# முன்னாள் அரசின் 13 உயர் அதிகாரிகள் தூக்கிலிடப்பட்டனர்

மொன்றோவியா, ஏப். 23

லைபீரியாமுன்னாள் வெளிநாட்டமைச்சர் உட்படமுன்னாள் அரசின் உயர் அதிகாரிகள்நேற்று பதின்மூன்றுபேர் முன்தினம் தூக்கிலிடப்பட்டனர்!

தற்போது பதவியிலிருக்கும் இராணுவ அரசு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்த உயர்அதிகாரிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மரணதண்டனை பெற்றவர்களில்: கொலையுண்ட லைபீரியா ஜனாதிபதியின் சகோதரரும் ஒருவராவார்என்பது குறிப்பிடத்தக்கது.

ஐவரைக்கொண்ட இராணுவ நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கிணங்கவே மேற்படி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

# மகளிர் தகவல் கல்வித்திட்டம்

(மாவிட்டபுரம்)

மகளிர் தகவல் கல்வித்திட்டத்தின்கீழ் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க எல்லைக்குள் வதியும் மகளிருக்கு சோயா அவரையிலிருந்து தயாரிக்கக்கூடிய பல்வேறு உணவுவகைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

போஷாக்குணவு, சுகாதாரம் தையல், மனையியல் போன்ற பல்வேறு துறைகளில் மகளிரிடையே அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் கவிடன் நாட்டு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்ட தலைவி திருமதி ஜீ. வை. வேலுப்பிள்ளை, செல்வி பா ஆறுமுகம், கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி அ தலபாலசிங்கம், ஆலோசனைக்குழு உறுப்பினர் செல்வி வ. கந்தையா ஆகியோர் கிளைகளுக்குச் சென்று அப்பகுதி மகளிருக்கு இத்திட்ட செயற்பாடுகளை விளக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

முதல்முறையாக சோயா அவரையிலிருந்து பல்வேறு உணவுப்பொருட்கள் தயாரிப்பது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு செய்முறைகளும் காண்பிக்கப்பட்டன. (ச)

# ஆகஸ்டுக்கு முன்னர் உள்ளூர் விமானசேவை

(கொழும்பு)

உள்ளூர் விமானச் சேவைகள் ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கான அனுமதி. பல உள்ளூர் தனியார்துறை கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வாடகை விமானச் சேவைகள் நடைபெறுமென்றும், வருடமுடிவில் கிரமமான முறையில், நேர அட்டவணையின்படி உள்ளூர் விமானச் சேவைகள் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கு விமானச்சேவைகள் நடைபெறும். (ம)

# தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி

# கொழும்பில்இன்று பேராளர் மாநாடு

(கொழும்பு)

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் 3வது பேராளர் மாநாடு, கொழும்பு கோட்டை சோனக இஸ்லாமியக் கலாசார நிலையத்தில் இன்று காலை நடைபெறவிருக்கிறது.

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் திரு. செ. ம செல்லத்தம்பு தலைமையில் நடைபெறவிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு ஐ. தி. சம்பந்தன் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ச)

# கல்வி அமைச்சர் - இ. ஆ. சங்க குழுவினர் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கக் குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை கல்வியமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்காவை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது மேற்படி ஆசிரியர் சங்கத்தினர், பின்வரும் விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவர்.

"அரசியல் பழிவாங்கல் மூலம் மாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குவது கல்விச் சேவைக்குழு நியமித்த பின்னரும் பிராந்திய, கல்விப் பணிப்பாளர்கள், தண்டனை இடமாற்றங்கள், தற்காலிக இடைநிறுத்தம், வேலைநீக்க உத்தரவுகள் வழங்குவது நிறுத்தப்படவேண்டும். சேவையிலுள்ள சகல பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பட்டதாரி சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

கல்வி அமைச்சரைப் பேட்டி காணும் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளுடன், யாழ் மாவட்ட கிளைச் செயலாளர் திரு ரீ தேவராசாவும் கலந்துகொள்வார். (கொ)

# "ஒரு கூடைக் கொழுந்து"

## நூல் அறிமுகவிழா

[யாழ்ப்பாணம்]

வைகறை வெளியீட்டாரின் இரண்டாவது வெளியீடான திரு: என். எஸ் எம். ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து'' சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா இம்மாதம் 25ம் திகதி மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு மு நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ் நடராஜா முதல் பிரதியை பெற்றுக்கொள்வார். திரு எம். ஏ. நுஃமான், திரு அ யோகராசா விமர்சனம் வழங்குவார். (ச)

# அமைச்சர் 'தேவா' பச்சிலைப்பள்ளி வருவார்

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கென பளையில் கண்டி வீதியில் 3 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

புதிய கட்டிடத் திறப்பு விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் பளை உதவி அரசாங்க அதிபர் திரு கு. கிட்ணர் தலைமையில் நடைபெற்றது. இப்பகுதியிலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

புதிய கட்டடம் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்திரு.கே. டபிள்யூ. தேவநாயகத்தினால் அடுத்த மாதம் நடுப்பகுதியளவில் திறந்து வைக்கப்படும். (அ)

# நீரில் மூழ்கி மரணம்

(பண்டத்தரிப்பு)

மாட்டுக்கு தண்ணீர் வைப்பதற்காக கிணற்றில் தண்ணீர் அள்ளிய 12 வயதுச் சிறுவன் ஒருவர், தவறி கிணற்றினுள் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார்.

இப் பரிதாப சம்பவம் இளவாலையில் நடைபெற்றுள்ளது.

ஜோசப் ஆனந்தராசா என்னும் பிரஸ்தாப 12 வயதுச் சிறுவனின் மரண விசாரணையை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் நடத்தினார். காலம் சென்றவரின் தந்தை சவரிமுத்து பெஞ்சியாம்பிள்ளை சாட்சியமளித்தார். நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். சாட்சிகளை சங்கானைப் பொலிசார் ஆஜர் செய்தனர்.

# உற்சவம்

(நெல்லியடி)

கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகியுள்ளது இம்மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் தேர், தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறும். (அ)


## பதவி வெற்றிடம்

மோட்டார் பதிவு திணைக்களத்தில், எமது வேலைகளை பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கான வேலைகள் செய்யக்கூடிய ஒருவருக்கு வெற்றிடமுண்டு.

தெரிவுசெய்யப்படும் நபர், யாழ்ப்பாணக் காரியாலயத்திலிருந்து தஸ்தாவேஜுகளை நாரம்பிட்டிய மோட்டார் பதிவுத் திணைக்களத்துக்கு எடுத்துச்சென்று கருமங்களை நிறைவேற்ற வேண்டும்

மோட்டார் பதிவு திணைக்கள முன்னைய ஊழியர் அல்லது மேற்படி திணைக்களத்துடன் தொடர்புடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அலவன்ஸ் நேரில் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 5-05-1980

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

விற்பனைமுகாமையாளர்

## த பினான்ஸ் கம்பனி லிமிட்.,

249 C மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 2008



யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

## இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வீட்டுப் பாவனைக்குகந்த சகல விதமான உலோக மட்பாண்டப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று மின்சார நிலைய வீதியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

உங்கள் தேவைகளை இன்றே பூர்த்தி செய்யுங்கள்

பொது முகாமையாளர்

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
74/3, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
22-04-'80


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈரான் - சோவியத் உடன்படிக்கை கைச்சாத்து: கம்யூ. நாடுகளுக்கு எண்ணை அனுப்பயோசனை

## ஈரானுக்கு உதவுவது குறித்து இந்தியாவும் ஆராய்கிறது

தெஹ்ரான், ஏப்ரல் 23

**சோவியத்யூனியனுடன் ஈரான், பிரதான பொருளாதார உடன்படிக்கையொன்றில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டதன் மூலம், அமெரிக்க பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஈரான் இப்பொழுது விலகிச் சென்றுகொண்டிருப்பதாக ஈரானிய ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.**

ஈரான்-சோவியத் ஒப்பந்தம் சர்வதேச ரீதியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈரானும் சோவியத்யூனியனும் பிரதான பொருளாதார உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இதன் விபரத்தை ஈரானிய நிதி அமைச்சர் உடனடியாக முழுமையாகத் தெரிவிக்காத போதிலும், "அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளிலிருந்து ஈரான் இப்பொழுது விடுதலைபெற்றுவிட்டது" என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

கைத்தொழில் உபகரணங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை சோவியத்யூனியன் உடனடியாக ஈரானுக்கு அனுப்பிவைக்க புதிய ஒப்பந்தம் வகை செய்துள்ளது என்று ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன. இவற்றை சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' உர்ஜிதம் செய்துள்ளது.

புதிய ஒப்பந்தம் மூலம், ஈரானிடமிருந்து சோவியத் யூனியன் இயற்கைவாயுவை கொள்வனவு செய்துகொள்ளும்.

இதேநேரத்தில், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதிசெய்து ஈரானுக்குத் தேவையான உணவுப்பொருள்களையும் ஏனைய பொருள்களையும் இறக்குமதிசெய்ய ஈரானிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே புதுடில்லியிலிருந்து நேற்று வெளியான செய்திகள் ஈரானுக்கு உதவுவது குறித்து இந்தியா இப்பொழுது தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றன.

## 'ஒலிம்பிக்ஸ் பகிஷ்கரிப்பு: அந்த இயக்கத்தை அழித்துவிடும்''

பம்பாய், ஏப்ரல் 23

"மாஸ்கோ ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிப்பது உலக ஒலிம்பிக் இயக்கத்துக்கு அழிவையே ஏற்படுத்தும்'' என்று பெல்ஜியத்தைச் சேர்ந்த சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவரான ரெனே ஃபிரான்க் பம்பாயில் கூறினர்.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா மலேசியா ஆகிய நாடுகள் பங்குபற்றிய சர்வதேச ஹாக்கிப்போட்டியில் கலந்துகொண்டுவிட்டுக் கோலாலம்பூரில் இருந்து இந்தியாவுக்கு வந்துள்ள ரெனே ஃபிரான்க், ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிக்கும் அமெரிக்க நடவடிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்தார்.

விளையாட்டுக்களில் அரசியலை கலக்கக்கூடாது. ஒலிம்பிக்கில் கலந்துகொள்வதற்கு தமது ஹாக்கி கோஷ்டிகளை அனுப்பவுள்ள பன்னிரண்டு நாடுகளில் பதினொரு நாடுகள் ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளும் தமது உடன்பாடுகளை மீண்டும் உறுதிசெய்துள்ளன என்றும் அவர் கூறினர்.

தமிழக தேர்தல் களம்

# நாளை வேட்புமனு தாக்கல் ஆரம்பம்

புதுடில்லி, ஏப்.23

ராஷ்டிரபதி ஆட்சியின் கீழுள்ள 9 மாநிலங்களில் சட்டசபைகளுக்குத் தேர்தல் மே 28, 31 தேதிகளில் நடைபெறும் என்று தலைமை தேர்தல் கமிஷனர் ஷக்தர் அறிவித்தார். வேட்பு மனுக்கள் 25ம் திகதிமுதல் தமிழ்நாடு குஜராத், மத்திய பிரதேசம் மகாராஷ்டிரம், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் வாக்குப் பதிவு இரண்டு நாட்களில் நடைபெறும்

பீஹார், ஒரிஸ்ஸா. பஞ்சாப் ஆகிய மூன்று மாநிலங்களில் வாக்குப்பதிவு ஒரே நாளில் நடக்கும்.

9 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடப்பதற்கான அறிவிப்பு ஏப்ரல் 25ம் திகதி வெளியிடப்படும்.

வேட்புமனு தாக்கலுக்கு கடைசி தேதி மே 2ம் தகதி மனுக்கள் பரிசீலனை மே 3 வேட்பாளர்கள் வாபஸ்பெற கடைசி திகதி மே 5.

மே 31 ஜூன் 1 தேதிகளில் வாக்குகள் எண்ணப்படும். ஜூன் முதல தேதி மாலைக்குள் எல்லா முடிவுகளும் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீகார், ஒரிஸ்ஸா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் வாக்குப் பதிவு எந்தத் திகதியில் நடத்துவது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

வாக்குப்பதிவு நேரம் எல்லா இடங்களிலும் காலை 8 முதல் மாலை 4 மணிவரை இருக்கும். பீகாரில் மதுபானி தொகுதி

(7-ம் பக்கம் பார்க்க)

# மே 31ல் முடிவுகள் வெளியாகும்!

சென்னை, ஏப் 23

தமிழக சட்டப் பேரவைக்கு இரண்டு நாட்களில் வாக்குப்பதிவு நடைபெறும். தேர்தல் முடிவுகள் மே 31-ம் திகதி நள்ளிரவுக்குள் அறிவிக்கப்பட்டு விடும் என்று தலைமை தேர்தல் அதிகாரி டி. கே. ஓஜா நிருபர்களிடம் தெரிவித்தார்)

தமிழகத்தில் தேர்தல்தள் அட்டவணை விவரம் வருமாறு:

தேர்தல் பற்றிய அறிவிப்பு வேட்பு மனு தாக்கல் செய்ய தொடங்கும் நாள்: ஏப்ரல் 25. வேட்புமனுதாக்கல்செய்ய கடைசி தேதி மே. 2

வேட்பு மனு மீதுபரிசீலனை மே. 3

வாபஸ் பெற கடைசிதினம் மே. 5.

மேமுதலாம் திகதி தொழிலாளர் திருநாள் என்பதற்காக அரசினர்விடுமுறை என்றாலும் அன்றைய தினம் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம். அதிகாரிகள் பெற்றுக் கொள்வர்ர்கள்.

தமிழகத்தில் தேர்தல் இரண்டு கட்டங்களாக இரண்டு தினங்கள் நடைபெறும் மே. 27 ம் திகதி அன்று 19 லோக சபைத் தொகுதிகளை உள்ளடக்கிய 114 சட்டப் பேரவை தொகுதிகளிலும் மே 30-ம் திகதியன்று 20 லோக சபைத் தொகுதிகளை உள்ளடக்கிய 120 சட்டப்பேரவை தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடை பெறும். ஆக மொத்தம் 234 தொகுதிகளிலும் மே முப்பதாம் தேதி அன்று வாக்குப் பதிவு நடைபெற்று முடிந்துவிடும்.

வாக்கு எண்ணிக்கையை மே

(7-ம் பக்கம் பார்க்க)

## இருதயமூளை ஆய்வு

கிஸ்லொவொட்ஸ்க், ஏப். 23

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவில் அமெரிக்கா, நெதர்லாந்து பற்றும் இதர நாடுகளின் மருத்துவ நிபுணர்கள், வடகாகஸிலுள்ள உலகப் பிரசித்திபெற்ற மருத்துவ விஞ்ஞான ஆய்வுநிலையமான இங்கு கூடி, மனித இருதயத்தினதும் மூளையினதும் உயிர்ப்பவ் வளங்களை அளவிடும் சோவித் முறையை ஆராய்ந்துள்ளனர்.

மருத்துவத்துறையில் 'மெட்ரோலொஜி' என்று அழைக்கப்படும் புதிய பிரிவு, நோயைச் சரியாகக் கண்டு பிடிக்கவும் சிகிச்சையளிக்கவும் பெரும் முக்கியத்துவம்கொண்டுள்ளது




சேர்கோப்பூர்

36% (3, 4, டி. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது. சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு
உழைப்பவன்
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

**SANTHI** JAFFNA Phone 7642
Daily 10-30, 2-15, 4-30; 7-15 & 9-45 p.m.
"THE STING"
—COLOR—ACTION PACKED MOVIE—
From 25th THE LOVES AND TIMES OF
"SCARAMOUCHE" color
Romantic...thrill...Suspense & Comedy

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சித்ரா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தொலைபேசி 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெயசங்கர்-லட்சுமி
ஜீவனாம்சம்

**REGAL**
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
GEORGE SEGAL, — GOLDIE HAWN
in
"THE DUCHESS AND THE DIRT WATER FOX"
(Color)

**ராஜா** - (யாழ்நகர் (சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன் நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

கடைசி இரு தினங்கள்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, மன்குமார் நடித்த
நெஞ்சுக்கு நீதி
From 26-4-80
My Name is Nobody

**மனோஹரா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ASLI NAKLI
அஸ்லி நக்லி
(ஹிந்தி)


வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி.

# கரபந்தாட்டசாம்பியன்தெரிவும், பரிசளிப்பும்: 'ஈழநாடு' - 'குமாரசாமி' கேடயங்கள்

## நாளை வேட்புமனு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் லோகசபை உபதேர்தலும், கேரளாவின் நிலாம்பூர் தொகுதி சட்டசபை உபதேர்தலும் மே 27 ம் திகதி நடைபெறும்.

இந்த 9 மாநிலங்களில் மொத்த வாக்காளர்கள் சுமார் 24.2 கோடியாக இருப்பார்கள். ஜனவரியில் நடந்த லோகசபை தேர்தலில் இந்த வாக்காளர்கள் 23.9 கோடி பேர்.

இந்தச் 9 சட்டசபைகளில் உள்ள மொத்த இடங்கள் 2237. ஷெட்யூல் வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் 341: ஷெட்யூல் மலைஜாதியினருக்கு 213 1977 தேர்தலுடன் ஒப்பிடும்போது ஷெட்யூல் வகுப்பினருக்கு 10 இடங்களும் ஷெட்யூல் மலைஜாதியினருக்கு 18 இடங்களும் அதிகரித்துள்ளன.

தேர்தலுக்குப் பிறகு இந்த மாநிலங்களில் ராஷ்டிரபதி ஆட்சி நீக்கப்படும்

தங்கள் மாநில சட்டசபைகளுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்குமாறு மக்களைக் கோரும் அறிவிப்பை ஏப்ரல் 25 ம் திகதி வெளியிடுமாறு 9 மாநில கவர்னர்களுக்கு சிபார்சு செய்யப்போவதாக தேர்தல் சமிஷனர் கூறினர்.

வானொலியில் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரம் பற்றி குறிப்பிடுகையில் கடந்த லோகசபை தேர்தலில் பின்பற்றப்பட்ட நடைமுறையில் மாற்றத்தைத் தான் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் சொன்னர்.

மாநில வாரியாக சட்டசபை இடங்கள் வருமாறு:-

தமிழ் நாடு 234: பீகார் 324: குஜராத் 182: மத்தியப் பிரதேசம் 320: மகாராஷ்டிரம் 288: ஒரிஸ்ஸா 147; பஞ்சாப் 117 ராஜஸ்தான் 200: உத்திர பிரதேசம் 425.

இந்த மாநிலங்களின் சட்டசபைகள் பிப்ரவரி 17 ல் கலைக்கப்பட்டன.

## மே 31-ல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

31-ம் திகதி தொடங்கலாம் என்று தலைமைத் தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது. எனினும் கடந்த லோகசபைத் தேர்தலின்போது கையாளப்பட்ட முறையைப் போல இரண்டாவது கட்ட வாக்குப் பதிவு நாளான மே 30-ம் திகதி பிற்பகலுக்குப் பிறகு எண்ணிக்கையை தொடங்கலாம் என்ற யோசனையை தெரிவிக்க இருக்கிறோம். இதை தேர்தல் கமிஷன் ஏற்றுக் கொண்டால், முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை மே 30-ம் திகதி மாலையிலிருந்து தொடங்கும். மே 31-ம் திகதி நள்ளிரவுக்குள் எல்லாத் தொகுதிகளிலும் வாக்குகள் எண்ணிக்கை நடத்தி முடிக்கப்பட்டு விடவேண்டுமென்று மத்திய தேர்தல் கமிஷன் ஆணையிட்டுள்ளது. இதை முடிக்கும் தயார் நிலையில் தமிழகம் உள்ளது" என்ற தகவலையும் தலைமை தேர்தல் அதிகாரி ஓஜா தெரிவித்தார்.


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா
அக்கரைப் பச்சை
(புதிய பிரதி)


(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்திவந்த அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தச் சுற்றுக் கேடயத்திற்கான மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றன. ஏப்ரல் 7-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்த இச்சுற்றுப் போட்டியில் மொத்தம் 123 கோஷ்டிகள் பங்கு பற்றியிருந்தன. இறுதிப் போட்டியின் ஒவர் கேம் 6 வீரர் ஒவர் கேம் 4 வீரர், செற் அப் என மூன்று வகைகளாக நடாத்தப்பட்டன.

### 'ஈழநாடு' வெற்றிக் கேடயம்

முதலாவதாக நடைபெற்ற ஒவர் கேம் 4 வீரர் ஆட்டத்தில் திருநெல்வேலி சிவன் வி. கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி. சமூகம் போட்டியிட்டது இப்போட்டியை திரு பொன். குமாரசாமி ஆரம்பித்து வைத்தார். 'போட்டி ஆரம்பத்தில் இருந்தே சோபையிழந்து காணப்பட்டது. போட்டியின் இறுதி நேரத்தில் சிறிது விறுவிறுப்புக் காணப்பட்டதாயினும் பெரும்பாலும் ஒருபக்கப் போட்டியாகவே இருந்தது. இப்போட்டியில் சிவன் விளையாட்டுக் கழகம் 51 — 21 புள்ளிகளால் வெற்றி பெற்று "ஈழநாடு" வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது. 2-ம் இடத்தைப் வகித்த நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் "அரசன்" அன்பளிப்பை பெற்றுக் கொண்டது. மத்தியஸ்தராக திரு எஸ். சுப்பிரமணியம் கடமையாற்றினர்.

### 6 வீரர் போட்டி

இப்போட்டியில் திருநெல்வேலி சிவன் வி. கழகத்தை எதிர்த்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை வி. கழகம் போட்டியிட்டது சிவன் விளையாட்டுக் கழகத்தின் வழமையான மின்னல் அடிகளை இப்போட்டியிலும் காணக்கூடியதாக இருந்தது எனினும் யாழ். சாலை வி. கழகம் மிகவும் சாதுரியமாக தடுத்து ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது போட்டியின் முதலாவது ஆட்டத்தை சிவன் கழகம் இலகுவாகப் பெற்றுக் கொண்டது. 2-ம் ஆட்டமும் சிவன் கழகத்திற்கே என எதிர்பார்த்திருந்த ரசிகர்களுக்கு யாழ். சாலை கழகத்தின் தீவிர மோதல் ஆச்சரியத்தையே கொடுத்தது. யாழ்-சாலை வீரர்கள் ஒவ்வொருவரும் தமது பொறுப்பை உணர்ந்து விளையாடி 3-வது ஆட்டத்தையும் பெற்று வெற்றியைத் தனதாக்கி கொண்டனர். யாழ். சாலை கழகத்தில் கப்டன் திரு. ஐ. திருச்செந்தூர் திரு. என். துரைசிங்கம் திரு. கே. நற்குணம் ஆகியோர் திறமையாக விளையாடி தமது கழகத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர் சிவன் கழக கப்டன் திரு. எஸ். மணியத்தினதும் திரு. அதிகாரியினதும் மின்னல் அடிகள் போட்டியின் சிறப்புக்கு மெருகூட்டியது. இப்போட்டியில் யாழ் சாலை வி. கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றிபெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தச் சுற்றுக் கேடயம் இம்முறை யாழ் சாலைக்கே உரித்தாகியது. 2-ம் இடத்தைப் பெற்ற சிவன் கழகம் திரு பீ இராசரத்தினம் அன்பளிப்பு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. மத்தியஸ்தராக திரு. எஸ். சுப்பிரமணியம் கடமையாற்றினர்.

### செற்-அப் ஆட்டம்:

இவ் ஆட்டத்தில் காங்கேசன்துறை பொலீஸ் வி. கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரீவிக்னேஸ்வரா வி. கழகம் போட்டியிட்டது இப்போட்டியை பிரதம விருந்தினர் திரு. மேர்வின் பெர்னாண்டோ ஆரம்பித்து வைத்தார். போட்டி ரசிகர்கள் எதிர்பார்த்தபடி மிகவும் விறுவிறுப்பாகவே காணப்பட்டது சென்ற ஆண்டிலும் சாம்பியனாக ஸ்ரீவிக்னேஸ்வராவே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது இக்கழகத்தின் வீரர் திரு. கே. ஜெயந்திரன் மின்னல் டாஸ் அடிகளும் நுணுக்கமான பந்து செலுத்தல்களுமே அவரது கழகத்திற்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தது. எனினும் திரு. எஸ் கிருஷ்ணராஜாவின் ஆட்டமும் குறிப்பிடும்படியாக இருந்தது. பொலீஸ் கழகத்தின் சார்பில் கப்டன் திரு. எம் டபிள்யூ. என் சில்வா திறமையாக விளையாடினார் எனினும் திரு. வை எம். ஹசீமின் டாஸ் அடிகளே பொலிஸ் கழகத்தின் திறமைக்கு மெருகூட்டியது. போட்டி இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்து மாறி மாறி ஒவ்வொரு ஆட்டங்களை இருகழகங்களும் பெற்றுக்கொண்டமையால் முழுமையாக ஐந்து ஆட்டங்களையும் விளையாட வேண்டியேற்பட்டது. இருகழகங்களுக்கும் 4-வது ஆட்டமே மிகவும் சோதனை மிகுந்ததாகக் காணப்பட்டது. இப்போட்டியில் ஸ்ரீவிக்னேஸ்வரா வி. கழகம் 3—2 ஆட்டங்களால் வெற்றிபெற்று அமரர் சுந்தவனம் கனகரத்தினம் ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்தையும் வெலிகம வெற்றிக் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற பொலீஸ் கழகம் "உமாறேடிங்" வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. 6 வீரர் சாம்பியன் கோஷ்டி திரு வி. செல்வராஜா அன்பளிப்பு வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது மத்தியஸ்தராக திரு. எம் பதுமநாதன் கடமையாற்றினர்.

பல்லாயிரக் கணக்கானோர் முன்னிலையில் நடைபெற்ற இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவிலும் காங்கேசன்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. மேர்வின் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார், சுற்றுப்போட்டி அமைப்பாளரும் நிலையச் செயலாளருமான திரு. எம். ஜெகநாதன் சுற்றுப் போட்டி பரிசளிப்பு விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் செய்திருந்தார். (ஈ)

## மரமுந்திரி உற்பத்தி

(...ஞர்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் மரமுந்திரிகைப் பழங்களை ஏராளமாக விற்பனை செய்து வருவதுடன் மர முந்திரிகைப் பழங்களிலிருந்து மரமுந்திரிப் பருப்பை எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்.

## இராசிபலன்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும், சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEW CAMBRIDGE**

திருநெல்வேலிச் சந்தி
5-5-80-ல் ஆரம்பம்
G. C E. (A/L) 81, 82
தாவரவியல்: திரு. சிவவிரசிங்கம்
விலங்கியல்: பிரபல ஆசிரியை
இரசாயனம்
திரு. சண்முகதாஸ் (கண்ணன்)
பௌதிகம்: பிரபல ஆசிரியர்
தூயகணிதம்-பிரயோக கணிதம்
பிரபல ஆசிரியர்

மேலதிக விபரங்களுக்கு:
V. M. PACKKIYANATHAN.



ஈழநாடு
The EELANAADU
50 சதம்


## உஷ்ணக்காற்றினால் 18 பேர் பலி!

புதுடில்லி ஏப். 23 இந்தியாவின் வடபகுதியில் வீசிய உஷ்ணக்காற்றினால் 18 பேர் உயிரிழந்தனர். இவ் உஷ்ணம் காரணமாக பல வட்டாரங்களில் மக்கள் குடிக்க குடிநீரின்றித் தவிக்கின்றனர். உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களிலேயே கடும் உஷ்ணம் நிலவி வருகிறதாம். இப் பிரதேசங்களிலுள்ள 960 கிராமங்கள் உஷ்ணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்களுக்கு தண்ணீர் வழங்குவதற்காக 400 தண்ணீர் தாங்கிகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.

## ஈரானுக்கெதிராக ஜப். பொருளாதார தடை?

டோக்கியோ, ஏப். 23 ஈரானுக்கு எதிராக இராஜதந்திர, பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள ஜப்பான் தீர்மானித்துள்ளது. மே 17-ம் திகதி முதல் இத்தீர்மானம் அமுலுக்குவருமென ஜப்பானிய அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. உணவு, மருந்து போன்றவற்றிற்கும் ஜப்பான் தடை விதிக்குமென பேலும் அவ் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

ஜப்பானுக்கு எண்ணெய் விநியோகம் செய்ய ஈரான் மறுத்ததைத் தொடர்ந்தே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

“அத்தியாவசியப் பொருட்களின்

# விலையேற்றத்தை ஈடுசெய்ய சம்பள உயர்வு வேண்டும்”

## தொழிற்சங்க கூட்டணி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் தவறான வரவுசெலவுத் திட்டத்தின் விளைவாகவும் உலக வங்கியின் நிர்ப்பந்தத்துக்கு இசைவாக ரூபாவின் விலைமதிப்பைக் குறைத்ததின் காரணமாகவும் அத்தியாவசியப் பொருட்களினதும், மருந்துவகைகளினதும், விலைவாசி உயர்வினாலும், பல நெடுங்காலமாக வழங்கப்பட்டு வந்த மானியங்களை நீக்கியமையினாலும், ஆடம்பரச் சாமான்களின் தற்போதைய தாராள இறக்குமதிக் கொள்கையாலும் ஏற்பட்ட தாக்கத்தைச் சகிக்க முடியாது பட்டினியால் வாடி வதங்கிக்கொண்டிருக்கும் நாள் சம்பள, மாதச்சம்பள, அரசினர், கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்களுக்கு மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை 1-1-1980 தொடக்கம் ரூபா 300/- கூட்டி வழங்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் உட்பட பலமுக்கியதீர்மானங்கள் தமிழ் தொழிற்சங்க கூட்டணி 3 வது பேராளர் மகாநாட்டுக்கு இன்று வருகின்றது. ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

இப்பொழுது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட உணவு முத்திரைத்திட்டம், உடனடியாக வாபஸ்பெறப்பட்டு இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து 1979 செப்டம்பர் மாதம்வரை நடைமுறையிலிருந்த வாராந்த பங்கீட்டு உணவுத்திட்டம் திரும்பவும் அமுலுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

தமிழ்மொழி அமுலுக்கும் சிங்களத் தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களின் விடயத்தைக் கவனிப்பதற்கும் இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட குழுவினாலே இப்பிரச்சனைகளைத் திருப்திகரமாக தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் இப்போதைய மாநாடு கருதுவதனாலும் சிங்களத் தேர்ச்சியின்மையினால் வேலையிழந்திருப்போரின் நிலை மோசமடைந்து வருவதனாலும் சிங்களத் தேர்ச்சியின்மை விவகாரத்தைக் கவனிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நிரந்தரமான தலைமைச் செயலகம் அமைத்தல்வேண்டும். தமிழ், ஆங்கில தினசரி ஒன்றை வெளியிடுதல் வேண்டும் என்பன போன்ற பல முக்கிய தீர்மானங்களும் மகாநாட்டுக்குவருகிறது.

## நஸீரின் மற்றுமொரு சாதனை முயற்சி!

(யாழ்ப்பாணம்)

கை தட்டி நடனமாடுவதில் உலக சாதனையை நிலைநாட்டும் முயற்சியில் ஜனுப் டரீத் நஸீர், நாளை 25ந் திகதி ஈடுபடவிருக்கிறார்.

வவுனியா லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவில், வவுனியா திறந்தவெளியரங்கில், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் இம்முயற்சியை ஆரம்பித்துவைப்பார்.

வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ஜ. சதீஸ்வரன் தலைமையில் இந்த உலக சாதனை முயற்சி நடைபெறும்.

41 மணி நேரம் கை தட்டி நடனமாடுவதில் உலக சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. இதனை முறியடித்து, 72 மணித்தியாலங்கள் கை தட்டி நடனமாடி, புதிய உலக சாதனையை ஜனுப் பரீத் நஸீர் நிலைநாட்ட முயற்சிப்பார். (க)

## நாராயண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்துள்ளது.

இந்திராகாந்தி 1977 அக்டோபர் மாதம் தமிழ்நாடு வந்தபொழுது ஆர்ப்பாட்டம் செய்தபோது கைதுசெய்யப்பட்டவர் மீதும், 1978ல் லோகசபையிலிருந்து இந்திராகாந்தி நீக்கப்பட்டபோது ஆர்ப்பாட்டம் செய்தபோது கைதுசெய்யப்பட்டவர்மீதும் தொடரப்பட்டுள்ள வழக்குகளையும் வாபஸ் செய்வதெனவும் தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளது.

## அகில இலங்கை வை.எம்.சி.ஏ. ஆண்டுக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கை வை. எம். சி. ஏ தேசிய சபையின் 15-வது வருடாந்தப் பொதுக் கூட்டம், இம்மாதம் 26 ம் திகதியும், 27-ம் திகதியும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வை. எம். சி. ஏ. தேசிய சபைத் தலைவர் திரு. வி. எல். வீரசிங்கா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் நாடெங்கிலுமுள்ள வை. எம். சி. ஏ. இயக்கங்களின் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

## புதுவருடவிழா

(வேலணை)

ஊர்காவற்றுறை பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுச் சங்கத்தால் நடாத்தப்படும் தமிழ் சிங்கள புதுவருட விளையாட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினமும் மேற்படி பொலிஸ் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## உணவு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எந்தவொரு பாவனையாளரும் தாம் வாங்கும் உணவுப் பண்டங்களின் நிறை சரியாக இருப்பதாக, முதலாளியைக் கோரும் பட்சத்தில், உணவுப் பண்டங்களை பாவனையாளருக்கு முதலாளிநிறுத்துக்காண்பிக்கவேண்டுமென்றும், விலைக் கட்டுப்பாட்டு ஆணையாளர் தெரிவித்தார் (கெ)


## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ரௌத்திரி வருஷம் சித்திரைத்திங்கள் 16-ம் நாள் (28-04-1980) திங்கட்கிழமை காலை 9-04 மணி தொடக்கம் 9-46 மணி வரையுள்ள சுபவேளையில்

| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| சிவநேசன் | திருமகள் |
| (D' Man C. E C. B. கொழும்பு) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் திருவருள் முன்னிட்டு யாழ்/கந்தர்மடம் பழம்றோட் விநாயகர் கோவிலில் நிகழவிருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்பசமேதராய் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| சு. நடேசரும் | வி. செல்லத்துரையும் |
| பாரியாரும் | பாரியாரும் |
| (இளைப்பாறிய கிளுப்பர்) | (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) |
| 'தவமகால்', | 20, புளியடி வீதி, |
| கரவெட்டி கிழக்கு, | கந்தர்மடம், |
| கரவெட்டி. | யாழ்ப்பாணம். |

5571



## தாதியர் தேவை

அனுபவம் உள்ள, பயிற்றப்பட்டோர் தேவை. திருமணமாகாதவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் 1-5-80க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
தனியார் வைத்திய சாலைகள்,
395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 5555


## புதுவருட விளையாட்டுப்போட்டி

(கோண்டாவில்)

ஆனைக்கோட்டைப் பொலிஸ்—பொது மக்கள் நல்லுறவுச் சங்கத்தால் நடாத்தப்பட்ட புதுவருட விளையாட்டியும், கலைவிழாவும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சரத் சந்திரா தலைமையில் நடைபெற்றது.

20மைல் ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் மைக்கல் மரியதாஸ், முருகன் செல்லையா, துரைச்சாமி வரதராஜா ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றனர்.

5மைல் பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிவேலு இரவீந்திரமாலா கந்தசாமி தனலட்சுமி திருநாவுக்கரசு இந்துமதி ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றனர்.

5மைல் மரதன் ஓட்டப்போட்டியில் என். தங்கராசா ஜேம்ஸ் ரஞ்சன் து தெய்வேந்திரம் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றனர்.

கரப்பந்தாட்டப் போட்டியில் ஆனைக்கோட்டை இளம் பிறை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவநேசன் (நேசன்)

காளி கோவிலடி மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பி (மெக்கானிக் ராசர்) திருமதி சின்னத்தம்பியின் புதல்வன் சிவநேசன் 23-4-80 அதிகாலை காலமாகிவிட்டார். இவர் இராஜேஸ்வரி, இராசேந்திரம், தெய்வேந்திரன் சிவதொண்டன் ஈஸ்வரி ஆகியோரின் சகோதரனும் தங்கவடிவேலுவின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் இன்று (24-4-80) வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் மல்லாகம் மயானத்தில் நடைபெறும் நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 5577



## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா அழகையா

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா அழகையா காலமானார். இவர் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் அழகையாவின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, துரைராசா (பேராசிரியர் பேராதனை பல்கலைக்கழகம்), நடராசா (காணிக்கந்தோர் பருத்தித்துறை), நவரத்தினராசா (அரசாங்க மிருகவைத்தியர்), இகேஸ்வரி (வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை) ஆகியோரின் தாயாரும், இராஜேஸ்வரி, வடிவாம்பிகை ஆகியோரின் மாமியாருமாவார். இறுதிக்கிரியை இன்று (24-4-80 காலை 8 மணிக்கு தம்பசிட்டி பருத்தித்துறையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் 5569



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ... வீதி 66-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under No. QD/88/8/78 The Eelanaadu, Post Box No 49, Telegram: 'Eelanaadu' Phone 220


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org